

**SAKTHI FOUNDATION - Uni5 RAMAYANAM - 3. பங்குனி உத்திரம்**

ஸ்ரீரங்கத்தில் வருதம் முழுவதும் பெருமாள் பல உற்சவங்கள் காண்கிறார்.அவற்றுள் அனைவரும் அதிகம் தெரிந்து அனுபவிப்பது வைகுண்ட ஏகாதசி.

ஆனால் அதைவிட மிகவும் ஸ்ரீரங்க வாசிகள் கண்டு களிக்கும் ஒரு உத்சவம் உண்டு.அது தான் பங்குனி உத்திரம்.

ஸ்ரீரங்கநாயகித் தாயார் சன்னிதியில் ப்ரகாரத்தை வலம் வரும் போது பங்குனி உத்திர மண்டபத்தை தரிசனம் செய்யலாம்.

அவ்விடம் மிகவும் அர்த்தம் உள்ள வெகு சிறப்பான இடம். வாழ்க்கையின் உன்னத தத்துவத்தை உணர்த்தும் இடம். ஸ்ரீமத் ராமாயணத்தின் மிக நுட்பம் வாய்ந்த ஒரு ரஹசியத்தை எடுத்துக் கூறும் இடம் அதுவாகும்.

மண்டபத் தூண்களில் ராமாயணத்தின் முக்கிய பாத்திரங்கள் மேடையை நோக்கிக் கைக்கூப்பி நிற்பர்.

அந்த மண்டபத்தின் மைய மேடைப் பகுதியைப் பார்த்தாலே ஏதோ இனம் புரியாத தெய்வீக சிலிர்ப்பு உண்டாகிறது.மனம் சற்று கலக்கம் ஆகிறது.

ஆண்டுக்கு ஒரி முறை, ஒரே ஒரு முறை பெருமாளும் தாயாரும் உடல் ரீதியாக

சந்திக்கும், சேர்த்தியில் அமர்ந்து இருக்கும் [அதுவும் சில மணி நேரமே] திவ்ய மேடை தான் இம்மண்டபம்.

ஸ்ரீரங்கத்தில் திருக்கல்யாணம் கிடையாது.ஆனால் சேர்த்தி உண்டு.நம்பெருமாள் ஸ்ரீரங்கநாயகியைக் கண்டு அவளுடன் உலாவி அமர்ந்து காட்சி தரும் ஒரே நாள் பங்குனி உத்திரம்.

அன்று ஸ்ரீரங்க மக்களும், இந்த விழாவின் மகத்துவம் அறிந்தோறும் விடிய விடிய விழாவைக் காண்பர்.

முழுக்க முழுக்க ஸ்ரீமத் ராமானுஜர் இவ்விழாவில் ஈடுபடுவதாகக் காட்டப்படுகிறது.

பங்குனி உத்திரம்
தகிக்கும் கோடை வெயில் காலம்
வெயில் போள் வாட்டும் சம்சார சாகரத்தில் இருந்து ஜீவனை இறைவன் மீட்டுத் தன்னுடன் ஐக்யம் ஆக்கும் விழா இது.
ஜீவனாகப் பிறந்தவன் ப்ரஹ்மத்தின் அனைத்து வினைகளுக்கும் கட்டுப்பட்டவன் என்ற சரணாகதிக் கோட்பாட்டை விளக்கும் விழா இது.
ஸ்ரீரங்கனுக்கு ஆதிகாலத்தில் இஷ்வாகு குல நபர்களும் அயோத்யா வாசிகளும் கொண்டாடிய முக்கிய விழா இது.

ஸ்ரீராமனுக்கு சீதைக்கும் கல்யாணம் ஆன திவ்ய நாள் அது.

சீதையை மீட்க லங்கையை நோக்கி ராமன் சேதுவை அமைக்க ஆரம்பித்த நாள் அது.

நம்மைப் போல் wedding day காண்கிறார்கள் ஸ்ரீரங்க திவ்யத் தம்பதியினர்.

ஆனால் நாம் காணும் கல்யாண நாளும் இவர்கள் காணும் கல்யாண நாளும் வேறு.

திவ்யத் தம்பதி யார்?
இதையும் BMIAC முறையில் பார்த்தல் வேண்டும்.

சீதையும் ராமனும் மிகவும் அன்யோன்யமான தம்பதி என்பதை வால்மீகி மிகவும்

நாசூக்காக நாகரீகமாக அழகாக சில ஸ்லோகங்களில் கூறிவிடுகிறார்.

தம்பதிகளின் அன்யோன்யம் வனவாசத்தின் போதும் புலப்படுகிறது.

ஆனால் இவ்விடத்தில் உண்மையான தம்பதி அன்யோன்யம் என்ன என்பதை இக்கால இளைஞர்கள் புரிந்து கொள்ள இப்பகுதியை வால்மீகி மூலம் பயன்படுத்துகிறோம்.

இல்லறத்தின் மிக முக்கிய நோக்கமே ஆன்மீகம்.தன்னை யார் என்று உணரவும், தன் கடமைகளை ஆணும் பெண்ணும் சரிவரச் செய்யவும் இல்லறம் தேவை.

ஆன்மீக வழியில் ஒருவருக்கு ஒருவர் துணை செய்வதால் தான் துணைவர் ஆகின்றனர்.

ராமனையும் சீதையையும் போல் காதல் வாழ்க்கை வாழ வேண்டும். தன் மனைவியை மீட்கக் கடலில் பாலம் அமைத்துக் கொண்டு சென்ற கணவன் யார்?

அதே ஸ்ரீராமன் தன் தேவி செய்த முக்கிய இரண்டு தவறுகளுக்கான தீவினைப் பயனைப் போர் முடிந்ததுமே முடித்தும் வைக்கிறார்.அதைப் புரிந்து கொள்ள நமக்கு மிகவும் தெளிந்த மனம் தேவை.அது விழிப்புணர்வு மூலமே வரும்.

சீதை ஒருத்தியின் பொருள் ஆசையினால் பூமி மீது லங்கையில் எத்தனை உயிர்கள் சேதம் ஆயின? எத்தனை வாரன வீரர்கள் பலி ஆயினர்.அவர்களுக்கு என்ன தேவை?

சீதையின் அந்த அறியாமையைச் சாடிக் கண்டிக்கிறார் போர் முடிந்த கையோடு.

அதே போல் பொருள் ஆசையின் உத்வேகத்தால் அடுத்து அடுத்து சீதை தன் மகனை ஒத்த லக்ஷ்மணனிடம் நடந்து கொண்ட விதம்!

விழிப்புணர்வை இழந்து சாதாரண சராசரிப் பெண்ணாக மாறிய அவளது வார்த்தைகளின் கொடுமை லக்ஷ்மணனை எத்தனை தூரம் பாதித்து இருக்கும்? மன உலைச்சலுக்கு ஆள் ஆக்கி இருக்கும்? அதை அவள் உணரத்தான் அவர் லங்கையில் அனைவர் முன்னும் அவளை சரமாரியாக வார்த்தைகளால் புண்படுத்துகிறார்.அது அவளுக்குப் புரியும்.

அதன் பயன்? அக்னிப் பரிட்சை!

அக்னி என்பது தன்னுள் சேரும் எதையும் மாற்றும். பஞ்சபூதங்களில் அக்னி பூரண ஞானத்தின் குறியீடு.தன் கணவன் எதற்காகத் தன்னைச் சாடுகிறார் என்று தன் பகுத்தறிவின் மூலம் உணர்க்கிறாள் சீதை.அதன் மூலம் தன்னுள் இருக்கும் பூரண ஞானம் என்ற அக்னியில் தன் செயல்களை புடம் போட்டுப் பார்க்கிறாள்.இதையே அக்னிப் பரிட்சை என்கிறோம்.அவளது ஞானத்தால் அவள் தெளிந்து தன் தவறுகளை மாற்றிக்கொள்ளும் பரிணாமம் அவளுக்கு வருவதே அவளை அக்னி ஏதும் செய்யவில்லை என்று காட்டப்படுகின்றது.

**"உன் அண்ணன் இல்லாத சமயத்தில் என்னை அனுபவிக்கப் பார்க்கிறாய்?"**
என்ற மிகவும் கேவலமான ஒரு வாக்கியம் சீதையின் வாயில் இருந்து வருகிறது.அதுவும் யாரைப் பார்த்துக் கேட்கிறாள். தன் மனைவியையும் போக வாழ்வையும் விட்டு விட்டு சதா அண்ணனும் அண்ணியும் போதும் அவர்களுக்குச் செய்யும் பணிவிடையே வாழ்க்கை என்று வந்த இளவலிடம் சீதை இப்படிப் பேசினாள்.ராமன் லக்ஷ்மணனைத் தன் மகனாகப் பார்க்கிறான்.

தசரதனுக்கு ராமனிடத்தில் அளவுக்கு மீறிய பாசம்.ஆனால் நால்வரில் லக்ஷ்மணனுக்கோ அப்பா மீது மிக்க பாசம்.

**"அப்பா இல்லாத குறை இவனுக்கு வரக்கூடாது என்று ராமன் தசரதனாகவே இருந்து லக்ஷ்மணனைப் பேணினான்"**

அப்படிப்பட்டவனைப் பார்த்து இவள் இவ்வாறு பேசினாள்.
அதுவும் உயர்ந்த ப்ரஹ்ம ரிஷி [ப்ரஹ்ம தத்துவத்தைத் தன்னுள் பூரணமாக உணர்ந்தவர்] ஜனகரின் மகள் கூறுகிறாள்.
காரணம் பொருள் பற்றில் அவள் மனம் விழிப்புணர்வை இழந்து விடுகிறது.

இன்றும் இளவலின் மறு ஜென்மமான ஸ்ரீமத் ராமானுஜர் பங்குனி உத்திர நாளில் தன் சரணாகதி கத்யத்தை ஓதுகையில் அதில் சதா திவ்யத் தம்பதிகளின் அருகில் இருந்து பல சேவைகள் செய்யும் வரம் கேட்கிறார்.

ராமானுஜ ஜென்மத்திலும் திவ்யத் தம்பதியினரின் பணிக்குத் தன் இல்லறத்தைத் துறக்கிறார்.

எப்படியோ போர் முடிந்து மீண்டும் அயோத்யா வந்த திவ்யத் தம்பதியினருக்கு

வாழ்க்கை நீடிக்கவில்லை.ஒரு வண்ணானின் பேச்சுக்கு மனதில் இடம் கொடுத்த ஸ்ரீராமன் தன் சீதையை இல்லறத்தை விட்டு ஒதுக்கினான்.இதுவே ஸ்ரீராமன் மீது மிக பயங்கரமான வழக்கைத் தொடுக்கக் கூடியது.

அடியேனும் கூட பல காலம் ஸ்ரீராமனின் செயலுக்குக் காரணம் விளங்காமல் இருந்தேன், குறை கூறியும் இருக்கிறேன்.ஆச்சாரியனின் அருளால் விளக்கம் கிடைத்த போது மாறினேன்.

இக்காலத்தில் மக்கள் தங்கள் குடும்ப வாழ்க்கைக்கு மட்டும் தான் முக்கியத்துவம் அளிக்கிறார்கள்.தான் தன் குடும்பம் அதைக் காக்க எதை வேண்டுமானாலும் செய்கிறார்கள். தம்பதிகளும் பிள்ளைகளும் அதர்ம வழியில் சென்றால் கூட அதைப் பாசத்தின் மேலோட்டத்தில் compromise செய்து கொள்கிறார்கள். அதன் பலன் தான் சமூஹத்தில் இன்று நிலவும் அக்ரமம்-அநீதி-அதர்மம்.இவற்றை நமக்கு நாமே தேடிக் கொள்கிறோம்!

**முதலில் மனிதன் எந்த ஒரு ப்ரச்சனைக்கும் முடிவு எடுக்க முற்படும் போது அதன் மூலம் யாருக்கு அதிக பாதிப்பு உண்டாகும் என்று யோசிக்க வேண்டும்.அதில் அவன் தான் சமூஹத்துடன் எப்படி எந்த அளவுக்குத் தொடர்பு படுகிறான் என்பதை உணர வேண்டும்.அவன் எடுக்கும் முடிவுகள் அவனை-அவன் குடும்பத்தை-உறவை-ஊரை-சமூஹத்தை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை அவன் விழிப்புணர்வில் இருந்து யோசிக்க வேண்டும்.இதையே தர்மம் என்கிறது கீதை.**

இதைத் தான் ஸ்ரீராமனும் சீதையும் லக்ஷ்மணனும் பரதனும் செய்தனர்.

வண்ணான் பேச்சைக் கேட்ட ராமன் தான் யார் தன் பொறுப்பு எது என்று உணர்கிறான்.

படித்தவரையும் பணக்காரரையும் உயர் பதவியில் உள்ளவரையும் பார்த்தே சமூஹமும் வாழ்கிறது.மிக உயர்ந்த சமூஹப்பொறுப்பை வகிக்கும் மனிதர்களின் வாழ்க்கையை மக்கள் முன் உதாரணமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

ராமன் தன் சமூஹப் பொறுப்பு உணர்வை உணர்கிறான்.சீதையும் அதையே செய்கிறாள். தாங்கள் கற்பில் ஒழுக்கத்தில் எத்தனை தூய்மையாக இருக்கிறோம் என்று முதலில் அவரவருக்குத் தெரிய வேண்டும்.தம்பதிகளுக்குள் ஒருவருக்கு ஒருவர் அந்த சத்யம் புரிந்து கொள்ளப் பட வேண்டும்.அது பூரண நம்பிக்கையின் பேரில் அமைந்ததே!

சீதையின் ஒழுக்கம் ஸ்ரீராமனுக்கு மிக மிக அந்தரங்கமாகத் தெரியும்.அதை அவன் ஊராருக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை தான். ஏன் ஒரு ராஜாவாக இருந்த அவன் அவதூறு பேசிய வண்ணானைக் கொன்று கூட இருக்கலாம், மரண தண்டனை அளித்தும் இருக்கலாம்.அதை ஏன் செய்யவில்லை? இருவரும் ஏன் பிரிந்தனர்.

ராமன் கர்ப்பினியான சீதையைக் காட்டில் கொண்டு விட்டு வருவது அவர்களுக்குள் ஏற்பட்ட மிகவும் அன்யோன்யமான அந்தரங்கத் தீர்மானம்.இருவரும் சேர்ந்து எடுத்த சமூஹப் பொறுப்பு மிக்கச் செயல்.

அதனால் தான் சீதையின் அப்பா ஏன் அப்படி ராமன் செய்தார் என்று ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை.

தங்களால் எல்லோரையும் போல் இல்லறத்தில் வாழ முடியாது என்று சீதாராமனுக்கு நன்கு தெரியும். அந்த விழிப்புணர்வில் இருந்து மனம் உணர்ச்சிக்கு ஆளாகக் கூடாது என்றே ஈஸ்வர ப்ரார்த்தனை ராமேஸ்வரத்தில் செய்தனர்.இது மிகவும் ரஹசியமான சூட்சுமமான செய்தி.

தவறு செய்யாத பெண் மீது சமூஹத்தில் ஒருவருக்கு சந்தேஹம் ஏற்படுகிறது.
பெண்ணின் கணவன் அதைக் கண்டு கொள்ளவில்லை.
இப்படி போனால் நாளை உண்மையில் ஒழுக்கம் தவறிய நிலையில் compromise செய்து கொள்ளும் போக்கு சமூஹத்தில் ஏற்பட்டுவிடும்,அதனால் சமூஹ ஒழுக்கமும் தனிமனித ஒழுக்கமும் வாழ்க்கையும் சீர்குலையும் என்ற உண்மையை ராமனும் சீதையும் உணர்கின்றனர்.

சமூஹத்தை வழி நடத்தும் அரசனும் அரசியுமான தாங்களே இவ்வாறு இருக்க மக்களும் எப்படி இருப்பர் என்று தம் சமூஹப்பொறுப்பு உணர்வை எண்ணிப் பார்த்து எடுத்த முடிவே இம்முடிவு.

இதனால் இருவருக்கும் ஏற்பட்ட இழப்புகள் எத்தனை எத்தனை?
ஆசை மனைவியை எத்தனை முயற்சி எடுத்து மீட்டு வந்தார் ஸ்ரீராமன்?!
அவளது அருகாமையை, இல்லறத்தை இளம் வயதில் துறக்கிறார்.
அது தான் ஆன்மீகப் பரிணாமம்.
அதையே சீதையும் செய்கிறாள்.
அதனால் இன்று வரை ஒழுக்கத்தின் இல்லறத்தின் உயர்ந்த மாதிரிகளாய்

வாழ்கிறார்கள்.

பின்னர் சீதையை ராமன் ஏற்பதில்லை.அதாவது உடல் ரீதியாக அவளை ஏற்பதில்லை.மனதால் வாக்கால் கர்மத்தால் விழிப்புணர்வால் மெய்யுணர்வால் அவரும் சீதையும் ஒரே நிலையில் தான் வாழ்ந்தனர்.

நம் ஒவ்வொருவரையும் இந்நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும்.

அதனால் தான் ஸ்ரீரங்கத்தில் சீதா ராமனாக இருவரும் பிரிந்தே இருக்கிறார்கள். உடல் ரீதியாக ஒவ்வொரு பங்குனி உத்திரம் அன்றும் சில மணிகளே சேர்த்தியில் சேர்கிறார்கள்.

ஒரு காலத்தில் மிகப்பெரிய படை எடுப்பு ஏற்பட்டது.அப்போது ஸ்ரீரங்கம் கோயில் கொள்ளை அடிக்கப் பட்ட போது நம்பெருமாளின் திவ்ய விக்ரஹம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தாயாரின் திருமேனியோ இன்று அவர் சன்னிதியில் இருக்கும் துளசி மாடத்தின் அடியில் பூமிக்குள் புதைக்கப்பட்டது.

சுமார் அறுபது ஆண்டுகள் நம்பெருமாள் ஸ்ரீரங்கத்தில் இல்லை என்று வரலாறு கூறுகிறது.

பின்னர் பெருமாளை சில அரசர்கள் பெருமுயற்சி செய்து மீண்டும் ஸ்ரீரங்கத்திற்குக் கொண்டு வர, தலைமுறை மாறிப் பலருக்கும் அவரை அடையாளம் தெரியவில்லை.

அப்போது ஒருவர், ”**எனக்குக் கண்கள் வயோதிகத்தால் பார்வை இழந்து விட்டது.என் பால்ய காலத்தில் அழகிய மணவாளப் பெருமாள் இருந்தார்.அப்போது அவருக்குத் திருமஞ்சனம் ஆகி அவரது ஆடையைப் பிழிந்து அதில் வடியும் தீர்த்தம் எங்கள் குடும்பத்துக்குத் தரப்படும்.அதைப் போல் செய்தால், அவரது திருமேனியில் பட்டு வரும் தீர்த்தத்தின் சுவையை அறிந்து இவர் அவரா என்று என்னால் அடையாளம் கூற முடியும்**” என்றார்.

அவர் கூறியபடி அறுபது ஆண்டுகள் கழித்து ஸ்ரீரங்கம் சேர்ந்த மூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்பட்டு அதன் தீர்த்தம் இவருக்குத் தரப்பட, ”**ஆஹா இவரே நம் பெருமாள்**” என்று அவர் அடையாளம் சரியாகக் காட்டிவிட்டார்.

அன்று முதல் உத்சவர் "**நம்பெருமாள்**" ஆனார்.

அடையாளம் காட்டியவரின் வம்சம் இன்றும் ஸ்ரீரங்கத்தில் அம்மரியாதை பெறுவதைக் காணலாம்.

யார் அவர்?

அவர் தான் ஈரங்கொல்லி - வண்ணான்! [ஆடையில் இருக்கும் ஈரத்தைக் கொல்பவன் - காய வைப்பவன்.பெருமாளின் ஆடைகளைத் துவைத்து உலர்த்தி வைக்கும் பணி இவர்களின் குடும்பத்துக்கே உரியது]

ஒரு வண்ணானால் பிரிந்த திவ்யத்தம்பதியினர் கலியுகத்தில் ஒரு வண்ணானால் சேர்த்தனர்.அயோத்யாவில் அன்று அவர்களின் பிரிவுக்குக் காரணம் ஆன வண்ணான் கலியில் தன் தீவினையை அறுக்க மீண்டு பிறந்து செய்வினையைத் தீர்த்துக் கொண்டான்.

ஸ்ரீமதே ராமானுஜாய நமஹா!

Photo Panguni uthiram 2011